செ.வெ.எண் :623 நாள்: 24.09.2021

# வேளாண்மைத்துறை

## விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் 24.09.2021

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு 2021-22-ம் ஆண்டில் குறுவை பருவத்தில் 66,454 எக்டர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டு, அறுவடை பணிகள் நடைபெற்றுவருகிறது. இது கடந்த 35 ஆண்டுகளில் இல்லாத சாதனை அளவாகும். சம்பா பருவத்தில் இதுவரை 17,833 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 12,000 எக்டர் சாகுபடி செய்வதற்கான நாற்றாங்கால் தயார் நிலையில் உள்ளது.

இதுவரை குறுவை மற்றும் சம்பா பருவத்திற்கு 1,159 மெட்ரிக் டன் நெல் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய கால நெல் விதைகள் 106 மெட்ரிக் டன் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

நமது மாவட்டத்திற்கு தேவையான யூரியா 3,622 மெ.டன்னும், டி.ஏ.பி. 1,974 மெ.டன்னும், பொட்டாஷ் 2,056 மெ.டன்னும், மற்றும் காம்ப்ளக்ஸ் உரம் 2,425 மெ.டன்னும் தனியார் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நுண்ணீர் பாசன திட்டத்தின்கீழ் கரும்பு, தென்னை, எண்ணெய்பனை போன்ற பயிர்களுக்கு சொட்டுநீர்பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசன கருவிகள் 3000 ஹெக்டர் பரப்பிற்கு ரூ. 13 கோடியே 96 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு மதுக்கூர், சேதுபாவாசத்திரம், திருவையாறு, திருவிடைமருதூர், திருப்பனந்தாள், கும்பகோணம் ஆகிய 6 வட்டாரத்தில் 300 விவசாயிகளுக்கு ரூ.1.35 கோடி மானியத்தில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டு பண்ணையத் திட்டத்தின் கீழ் 2021-22-ம் ஆண்டில் 140 உழவர் ஆர்வலர் குழுக்கள் அமைத்து அதன் மூலம் 28 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, வேளாண்மை இயந்திரங்கள் பெறுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேசிய உணவு பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் பம்புசெட், ரோட்டவேட்டர், விசைத்தெளிப்பான், தண்ணீர் கொண்டு செல்லும் குழாய்கள் ஆகியவையும் வழங்குவதற்கு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

தமிழக முதல்வரின் மானாவாரி மேம்பாட்டு இயக்க திட்டத்தின் கீழ் 1000 எக்டரில் மானாவாரி நிலங்களை மேம்பாடு செய்து, சாகுபடி மேற்கொள்ள எக்டருக்கு ரூ.1250/- வீதம் உழவு மானியம் வழங்கிட பூதலூர் மற்றும் தஞ்சாவூர் வட்டாரங்களில் உழவு பணி மேற்கொள்ளபட உள்ளது. மேலும் ரபி பருவத்தில் பயிர் சாகுபடி மேற்கொள்ள 50 சதவீத

மானிய விலையில் விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டங்கள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 325 எக்டர் தரிசு நிலத்தினை மேம்பாடு செய்து, ரபி பருவத்தில் உளுந்து மற்றும் எள் சாகுபடி மேற்கொள்ள 43.55 இலட்சம் இலக்காக பெறப்பட்டு, 14 வட்டாரங்களில் பயனாளிகள் தேர்வு முடிந்து, உழவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுப்பிக்கப்பட்ட பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தை செயல்படுத்த இந்த ஆண்டு ரபி சிறப்பு பருவத்திலிருந்து அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ரபி சிறப்பு பருவத்தில் சம்பா (நெல் II ) சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.513 பிரீமியம் செலுத்தி ரூ.34,175. ரூபாய்க்கு காப்பீடு செய்து கொள்ளலாம். பயிர் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்ய கடைசி நாள்: 15.11.2021.

கடந்த ஆண்டு சம்பா பருவத்தில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு விரைவில் பெற்று வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் வட்டாரத்திற்கு 7 கிராம பஞ்சாயத்துக்கள் வீதம் மொத்தம் 98 கிராம பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டு திட்டம் செயலாக்கிட ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேளாண்மைத்துறை மூலம் வடிவமைக்கப்பட்டுள்ள உழவன் செயலியை அனைத்து விவசாயிகளும் தங்கள் கைபேசியில் பதிவிறக்கம் செய்து வேளாண் துறை சம்மந்தப்பட்ட அனைத்து தகவல்களையும் அறிந்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## தோட்டக்கலைத்துறை

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் **2021–2022** நிதியாண்டில் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்கள்

1. தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)
2. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் (NADP)
3. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)
4. பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டம் (PMKSY)
5. துணை நீர் மேலாண்மை செயல்பாடுகள் திட்டம் (SWMA)

மேற்காணும் திட்டங்களின் மூலம் நிதி இலக்கு **2624.58** இலட்சங்கள் பெறப்பட்டு **2021–2022**ம் நிதியாண்டிற்கான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு தஞ்சாவூர் மாவட்டத்தின் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் விரிவான பொருள் இலக்கு மற்றும் நிதி இலக்கு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 1 தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) 2021–2022

இத்திட்டத்தின்கீழ் 2021–2022 நிதியாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 4984 எக்டர் / அலகு / எண்கள் பொருள் இலக்கு மற்றும் நிதி இலக்கு ரூ 169.60 இலட்சம் பெறப்பட்டு, திட்டம் செயல்படுத்திட தஞ்சாவூர் மாவட்டத்தில் 14 வட்டாரங்களில் விவசாயிகளின் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு 50 சத நிதியுதவியுடன் பழச்செடிகளான மா ஒட்டுக்கள், கொய்யா பதியன்கள், திசு வாழை, பப்பாளி, எலுமிச்சை, அத்தி மற்றும் காய்கறிகள் சாகுபடி மேம்படுத்தும் பொருட்டும் சாகுபடி பரப்பினை அதிகரிக்கவும் கத்திரி, மிளகாய் குழித்தட்டு நாற்றுகள், புடலை, பாகல், சுரைக்காய் விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பாதுகாக்கப்பட்ட சூழலில் தோட்டக்கலைப்பயிர் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு நிழல்வலைக்குடில் அமைப்பதற்கும், நீர் சேகரிப்பு அமைப்பான பண்ணைகுட்டை மற்றும் பயிர்களின் உற்பத்தியை பெருக்குவதற்கு மண்புழு உரப்படுக்கை அமைக்கும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் தோட்டக்கலைப்பயிர்களில் மகரந்த சேர்க்கையினை மேம்படுத்தி உற்பத்தியினை பெருக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு தேனீப்பெட்டி, தேனீ குடும்பம் மற்றும் தேன் எடுக்கும் கருவி வழங்கப்படுகிறது. விவசாயிகள் அறுவடை செய்த காய்கறி மற்றும் பழங்களை நேரடி விற்பனை செய்வதற்கு நடமாடும் காய்கறி வண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது.

## 2. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் (NADP) 2021– 2022

இத்திட்டத்தின்கீழ் 2021–2022 நிதியாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 593 எக்டர் / அலகு / எண்கள் பொருள் இலக்கு மற்றும் நிதி இலக்கு ரூ 93.305 இலட்சம் பெறப்பட்டு திட்டம் செயல்படுத்திட தஞ்சாவூர் மாவட்டத்தில் 14 வட்டாரங்களில் விவசாயிகளின் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு 40 சதம் மற்றும் 50 சதம் நிதியுதவியுடன் பழ செடியான அத்தி மற்றும் காய்கறிகள் சாகுபடி மேம்படுத்தும் பொருட்டு முருங்கை, பனை விதைகள், வெங்காயம் விதைகள் விநியோகம் செய்யப்பட்டு பரப்பு விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

அங்கக முறையில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ. 2,500/–லிருந்து ரூ. 5,000/– வரை வழங்கப்பட்டு வருகிறது. கொடி வகை காய்கறிகள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பந்தல் அமைப்பதற்கு மானியம் வழங்கப்படுகிறது.

## 3. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TN IAMP) 2021–2022

இத்திட்டத்தின்கீழ் 2021–2022 நிதியாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 169 எக்டர் / அலகு / எண்கள் பொருள் இலக்கு மற்றும் நிதி இலக்கு ரூ 99.926 இலட்சம் பெறப்பட்டு திட்டம் செயல்படுத்திட தஞ்சாவூர் மாவட்டத்தில் 11 வட்டாரங்களில் விவசாயிகளை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. சொட்டுநீர் பாசன வசதி செய்து கொடுக்க விவசாயிகளுக்கு 75 சதம் மற்றும் 100 சதம் மானியத்தில் அமைக்கப்பட உள்ளது.

**4. பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டம் (PMKSY) 2021 –2022**

இத்திட்டத்தின்கீழ் 2021–2022 நிதியாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 2661 எக்டர் பொருள் இலக்கு மற்றும் நிதி இலக்கு ரூ 1979 இலட்சம் பெறப்பட்டு திட்டம் செயல்படுத்திட தஞ்சாவூர் மாவட்டத்தில் 14 வட்டாரங்களில் விவசாயிகளை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் ஒரு விவசாயி அதிகபட்சமாக 5 எக்டர் சொட்டுநீர் பாசனம் அமைக்கலாம். இதுவரையில் இத்திட்டத்தின்கீழ் 2661 எக்டர் பரப்பில் சொட்டுநீர் பாசன அமைத்திட 492.46 எக்டர் பரப்பிற்கு பதிவு செய்யபப்பட்டு 311.51 எக்டர் பரப்பு எக்டருக்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

**5. துணை நீர் மேலாண்மை செயல்பாடுகள் திட்டம் (SWMA) 2021 –2022**

இத்திட்டத்தின்கீழ் 2021–2022 நிதியாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 1545 எண்கள் பொருள் இலக்கு மற்றும் நிதி இலக்கு ரூ 282.75 இலட்சம் பெறப்பட்டு திட்டம் செயல்படுத்திட தஞ்சாவூர் மாவட்டத்தில் 14 வட்டாரங்களில் விவசாயிகளை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க உள்ள விவசாயிகளுக்கும் முன்னுரிமை கொடுத்து நீர் மேலாண்மையினை மேம்படுத்தும் பொருட்டு விவசாயிகளுக்கு அதிகபட்சமாக புதிய ஆழ்துளை கிணறு அமைக்க ரூ. 25,000/– (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்), புதிய மோட்டார் கருவி வாங்க ரூ. 15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) , புதிய பைப்லைன் அமைப்பதற்கு ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மற்றும் புதிய நீர் தேக்க அமைப்பு அமைப்பதற்கு ரூ. 40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) விவசாயி ஒருவருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## வேளாண்மைப் பொறியியல் துறை

## செயல்படுத்தும் திட்டங்கள்

### 1. உழுவை வாடகைத் திட்டம்

நிலத்தினை உழுவதற்கு சாகுபடிக்கு ஏற்றவாறு பண்படுத்துவதற்கும் உழுவைகள் மணிக்கு ரூ. 340/- என்ற வாடகையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. உழுவையுடன் 9 கொழு கொத்துகலப்பை, சுழற் கலப்பை, லேசர் லெவலர், சட்டிக்கலப்பை, பண்ணைக் கழிவுகளை துகளாக்கும் இயந்திரம், நெல் உலர்த்தும் இயந்திரம் போன்ற விவசாய கருவிகளை இணைத்து வாடகைக்குவிடப்படுகிறது. நீண்ட பள்ளம் தோண்டும் இயந்திரம் மற்றும் அறுவடைக்குப் பின்னர் பயன்படுத்தக்கூடிய வைக்கோல் கட்டும் இயந்திரமும் வாடகைக்கு வழங்கப்படுகிறது.

## 2. சிறுபாசனத் திட்டம்

இத்திட்டத்தில் குழாய் கிணறுகள் அமைக்க விசைத்துளைக் கருவிகளுக்கு ஒரு மீட்டருக்கு ரூ.130/- மற்றும் சிறுவிசைத்துளைக் கருவிகளுக்கு ஒரு மீட்டருக்கு ரூ.70/- என்ற வாடகைக்கும் வழங்கப்படுகிறது.

## 3. அறுவடை இயந்திரம்

விவசாயிகளின் நிலங்களில் நெல் அறுவடைப் பணிகளை மேற்கொள்வதற்கு டயர் வகை அறுவடை இயந்திரம் மணிக்கு ரூ.875/- என்ற வாடகையிலும், பெல்ட் வகை இயந்திரம் மணிக்கு ரூ.1415/- என்ற வாடகையிலும் விவசாயிகள் பயன்பெற வழங்கப்படுகிறது.

## 4. வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டம்:

இத்திட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானிய அடிப்படையில் வழங்கப்படுகிறது. சிறு/குறு/ஆதிதிராவிடர்/பெண் விவசாயிகளுக்கு 50% மானியமும், இதர விவசாயிகளுக்கு 40% மானியம் அல்லது அரசு நிர்ணயித்துள்ள மானியம் வழங்கப்படுகிறது. அதிகபட்ச மானியத்தொகை கீழ்கண்ட அட்டவணையில் உள்ளது.

| வ. எண் | வேளாண் இயந்திரம் | பொது விவசாயிகளுக்கான மானியம் அதிகபட்சம் | சிறு/குறு/பெண்/ ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கான மானியம் |
|---|---|---|---|
| 1. | டிராக்டர் | 4,00,000 | 5,00,000 |
| 2. | பவர் டில்லர் | 70,000 | 85,000 |
| 3. | ரொட்டவேட்டர் | 32,000 | 44,800 |
| 4. | நடவு இயந்திரம் பெரியது | 4,00,000 | 5,00,000 |
| 5. | நடவு இயந்திரம் சிறியது | 1,13,300 | 1,50,000 |
| 6. | மட்டை தூளாக்கும் கருவி | 50,000 | 63,000 |
| 7. | களை எடுக்கும் கருவி | 30,000 | 35,000 |
| 8. | வைக்கோல் கட்டும் இயந்திரம் | 1,41,200 | 1,76,500 |
| 9. | கதிர் அடிக்கும் இயந்திரம் | 80,000 | 1,00,000 |

| | | | |
|---|---|---|---|
| 10. | விதையிடும் இயந்திரம் | 17,000 | 21,000 |
| 11. | நெல் அறுவடை இயந்திரம் | 8,80,000 | 11,00,000 |

**5. வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் அமைத்தல்:**

இத்திட்டத்தில் விவசாயிகள், பாசன சபைகள், வேளாண் உற்பத்தியாளர் நிறுவனம், தொழில் முனைவோர் குறைந்த வாடகையில் வேளாண் கருவிகளை தங்கள் பகுதி விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ரூ.25 லட்சம் மதிப்புள்ள வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது.

**6. அறுவடை பின்சார் தொழில்நுட்ப மேலாண்மை இயந்திரங்கள் வழங்குதல்**

இத்திட்டத்தில் தானியங்கள் உடைக்கும் இயந்திரங்கள், தோல் நீக்கும் இயந்திரங்கள், எண்ணெய் பிழியும் இயந்திரங்கள், பொடியாக்கும் இயந்திரங்கள் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் வாங்குவதற்கு 40% என்ற அளவில் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். இதனை தனி விவசாயிகள், விவசாய குழுக்கள், சுய உதவிக்குழுக்கள், உற்பத்தியாளர் நிறுவனம் போன்றோர்கள் பயன்பெற முடியும்.

**7. சூரிய ஒளி கூடார உலர்த்தி அமைத்தல்:**

விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருட்களை பாதுகாப்பான முறையில் உலர்த்துவதற்கு சூரிய ஒளி கூடார உலர்த்தி மானிய அடிபப்படையில் அமைக்கப்படுகிறது. குறைந்தபட்சம் 400 சதுர அடி முதல் 1000 சதுர அடி வரை சூரிய ஒளி கூடார உலர்த்தி அமைத்திட சிறு/குறு/ஆதிதிராவிடர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு 60% (அ) 3,55,000/- என்ற அளவிலும் பொது விவசாயிகளுக்கு 50% (அ) 3,00,000/- என்ற அளவிலும் பின்னேற்பு மானியம் வழங்கப்படுகிறது.

**8. சூரிய ஒளி மின்சக்தி மூலம் நீர் இறைக்கும் அமைப்பினை நிறுவுதல்:**

இந்த திட்டத்தில் 5HP, 7.5 HP, 10 HP வரை விவசாயிகள் சூரியசக்தி மோட்டார்களை வயல்களில் அமைத்துக்கொள்ள முடியும். இத்திட்டத்தில் பயன்பெறும்

விவசாயிகள் அவசியம் சொட்டுநீர் பாசனம் (அ) தெளிப்பு நீர் பாசனம் அமைத்தல் வேண்டும்.

| சூரிய ஒளி மின்சக்தி | மொத்த விலை ரூ | விவசாயிகளின் பங்குத்தொகை ரூ. | மானியத்தொகை ரூ. |
|---|---|---|---|
| 5 HP AC | 237947 | 71384 | 166563 |
| 5 HP DC | 242303 | 72691 | 169612 |
| 7.5 HP AC | 316899 | 95070 | 221829 |
| 7.5 HP DC | 349569 | 104871 | 244698 |
| 10HP AC | 437669 | 131301 | 306368 |
| 10 HP DC | 439629 | 131889 | 307741 |

**9. பண்ணைக் குட்டைகள் அமைத்தல்**

NABARD திட்டத்தில் ரூ.1,00,000/- மதிப்பீட்டிலும் மற்றும் TNIAMP திட்டத்தில் ரூ.75,000/-மதிப்பீட்டிலும் பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இப்பண்ணைக் குட்டைகள் மூலம் 38,000 க.அடி முதல் 80,000 க.அடி வரை நீரினை சேமிக்க முடியும். இதனை கொண்டு 4-5 ஏக்கர் நிலத்தின் தெளிப்பு நீர் சொட்டு நீர் பாசனம் கொண்டு பாசனம் செய்ய முடியும்.

**10.சூரிய ஒளி மூலம் இயக்கும் மின்வேலி அமைத்தல்:**

பல பகுதிகளில் விலங்குகளிடமிருந்து பயிர்களை சேதமின்றி பாதுகாத்திட ஏதுவாக சூரிய ஒளி மூலம் இயங்கும் மின்வேலி அமைத்து தரப்படுகிறது. மேலும் மக்கள் நடமாட்டம் குறைவான தொலைதூரப் பகுதிகளில் பயிரடப்படும் பயிர்களை பாதுகாக்க இம்மின்வேலி சிறந்ததாக கருதப்படுகிறது. இத்திட்டத்தில் பங்குபெறும் விவசாயிகளுக்கு 50% மானியம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது.

**11. பிற துறைப்பணிகள்:**

சகோதர துறைகளான வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் வேளாண் பண்ணைகளில் உட்கட்டமைப்பு

வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல் போன்ற பணிகள் இத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**உழவன் கைபேசி செயலி:**

வேளாண்மைத்துறையில் மின்னனு தொழில்நுட்பத்தின் அடுத்த கட்டமாக வேளண்மைத்துறை சார்ந்த செயல்பாடுகள் மற்றும் தகவல்கள் அனைத்தும் விவசாயிகளிடம் விரைவில் சென்றடைவதற்காக “உழவன்” என்ற கைபேசி செயலி தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் விண்ணப்பத்தினை உழவன் செயலியில் பதிவு செய்து தொடர்ந்து மத்திய அரசின் இணையதளமான **www.agrimachinery.nic.in** மூலமாக பதிவு செய்தும் மூதுரிமை அடிப்படையில் மானியத்தில் இயந்திரங்கள்/கருவிகள் பெற்று பயனடையுமாறு தெரிவிக்கப்படுகிறது.

## வேளாண்விற்பனைமற்றும் வணிகத் துறை

### உழவர் சந்தை

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு புதிய உழவர் சந்தை 1 எண் இலக்கு நிர்ணயக்கப்பட்டுள்ளது. புதிய உழவர் சந்தை அமைப்பதற்கு பேராவூரணி வட்டாரத்தில் மாவடுகுறிச்சி மேற்குவருவாய் கிராமத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே இயங்கிவரும் உழவர் சந்தைகளை மேம்படுத்துவதற்கு, தஞ்சாவூர் உழவர் சந்தை தேர்வு செய்யப்பட்டு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, கும்பகோணம், திருக்காட்டுப்பள்ளி மற்றும் பாபநாசம் ஆகிய 5 இடங்களில் உழவர் சந்தைகள் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. இதுவரை இந்த 5 **உழவர் சந்தைகளிலும் ரூ.1296லட்சம் மதிப்பில் 4299 மெ.டன் காய்கறி வரத்து இருக்கிறது. இதுவரை 14112 விவசாயிகளும் 833944 நுகர்வோரும் பயனடைந்துள்ளார்கள்.**

**<u>தஞ்சாவூர்</u> மாவட்டத்தல் இயங்கி வரும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் தேசிய வேளாண் வளாச்சி திட்டம், நீடித்த நிலையானவேளாண்மை இயக்கம் , கூட்டுப்பண்ணையத் திட்டம் மற்றும் தமிழ்நாடு நீர் பாசன மேலாண்மை நவீனமயமாக்கல் திட்டங்களின் மூலம் 13 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் 359.16 இலட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்டு தற்போது சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் 13,463 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.

**தஞ்சாவூர் மாவட்டத்தல் இயங்கி வரும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் விபரம்,**

1.இராஜராஜ சோழன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், தஞ்சாவூர்.

2.பேராவூரணி தென்னைவேளாண் உற்பத்தியாளர் நிறுவனம், பேராவூரணி.

3. தஞ்சாவூர் கூட்டுப் பண்ணையத் திட்டஉழவர் உற்பத்தியாளர் நிறுவனம், தஞ்சாவூர்

4.நெற்க்களஞ்சியம் கூட்டுப் பண்ணையத் திட்டஉழவர் உற்பத்தியாளர் நிறுவனம்,. கும்பகோணம்.

5. பட்டுக்கோட்டை கூட்டுப் பண்ணையத் திட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், பட்டுக்கோட்டை

6. பேராவூரணி கூட்டுப் பண்ணையத் திட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், பேராவூரணி.

7.பிரகதீஸ்வரர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், தஞ்சாவூர்.

8.கும்பகோணம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், கும்பகோணம்.

9.நியூடெல்டா கூட்டுப்பண்ணைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், பட்டுக்கோட்டை.

10. நந்தி கூட்டுப்பண்ணைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ,தஞ்சாவூர்

11. திருநாடு கூட்டுப்பண்ணைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ,ஒரத்தநாடு

12. பேராவூரணி பொன்னி கூட்டுப்பண்ணைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் , பேராவூரணி

13. கும்பகோணம் டெல்டா கூட்டுப்பண்ணைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ,கும்பகோணம்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் உருவாக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வணிக முன்னேற்றத்திற்காக ரூ.120 இலட்சம் மதிப்பில் விதைகள் மற்றும் நடவு பயிர் துணை இயக்கத்தின் கீழ் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு இராஜராஜ சோழன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் தஞ்சாவூர் கூட்டுப்பண்ணைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு நீர் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் வேளாண் விளைப்பொருட்களை மதிப்பு கூட்டுதல் செய்வதற்காக ரூ. 60.00 இலட்சம் நிதி உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கூட்டு பண்ணை திட்டத்தின்கீழ் 4 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வணிக முன்னேற்றத்திற்கான நிதியான ரூ.20.00 இலட்சம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ரூ.15.40 இலட்சம் மதிப்பீட்டில் இராஜராஜ சோழன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு உளுந்து மதிப்புக் கூட்டுதல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்களின் மூலம் 5920 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.

**தமிழ்நாடு பாசன நீர் வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ்காவிரி டெல்டா உபவடிநிலபகுதியில் உள்ள தஞ்சாவூர், பூதலூர், திருவையாறு, அம்மாப்பேட்டை, கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் மற்றும் மதுக்கூர் ஆகிய வட்டாரங்களை உள்ளடக்கிய 100 (எண்கள்) விளைபொருள் ஆர்வலர் குழுக்களை (ஊஐழு)

ஒருங்கிணைத்து 2 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைப்பதற்கு இயக்குநர்கள் தேர்வு பணிகள் நடைபெற்று வருகிறது.

**அக்மார்க் ஆய்வகம்**

அக்மார்க் ஆய்வகத்தில் இதுவரை **14507 குவிண்டால்** விளைபொருட்கள் பகுப்பாய்வு செய்து, தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

## கால்நடை பராமரிப்புத் துறை

**1) மாதிரி வரைவு திட்டம் :**

2020-21-ஆம் ஆண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட வருவாய் கிராமங்களில் கணக்கெடுக்கும் பணிக்காக வருகைபுரியும் கணக்கெடுப்பாளர் மற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி தங்களிடம் இருக்க கூடிய கால்நடைகளின் விவரங்களை எவ்வித ஒளிவு மறைவின்றி தெரிவித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதனடிப்படையில் தான் மத்திய அரசு உதவியுடன் திட்டங்கள் தீட்டப்படுவதால் அதனில் மிகுந்த கவனத்துடன் புள்ளி விபரங்கள் அளித்திட வேண்டப்படுகிறது.

**2) கால்நடை பாதுகாப்புத்திட்டம்:**

இம்மாவட்டத்தில் 2020-21-ஆம் ஆண்டிற்கு 204 கால்நடை பாதுகாப்பு திட்டம் முகாம் நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாளது வரை 204 முகாம் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 2021-22-ம் ஆண்டிற்கான தலைமை அலுவலகத்திலிருந்து குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**3) விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம்:**

2020-21-ம் ஆண்டிற்கான 6157 குறியீடு தலைமை அலுவலகத்திலிருந்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 6159 அடைவு செய்யப்பட்டுள்ளது. 2021-22 -ம் ஆண்டிற்கான இத்திட்டம் தொடர்பாக நாளது தேதி வரை அரசாணை ஏதும் பெறப்படவில்லை.

**4) விலையில்லா கறவைப்பசுக்கள் வழங்கும் திட்டம்:**

2020-21-ம் ஆண்டிற்கான 400 குறியீடு தலைமை அலுவலகத்திலிருந்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 400 அடைவு செய்யப்பட்டுள்ளது 2021-22 -ம் ஆண்டிற்கான இத்திட்டம் தொடர்பாக நாளது தேதி வரை அரசாணை ஏதும் பெறப்படவில்லை.

**5) விலையில்லா ஊரக புறக்கடை கோழி வளர்ப்புத்திட்டம்:**

2020-21-ம் ஆண்டிற்கான 5600 குறியீடு தலைமை அலுவலகத்திலிருந்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 5600 அடைவு செய்யப்பட்டுள்ளது 2021-22 -ம் ஆண்டிற்கான இத்திட்டம் தொடர்பாக நாளது தேதி வரை அரசாணை ஏதும் பெறப்படவில்லை.

**(மாநில தீவன அபிவிருத்தி திட்டம் (2021-22)**

இத்திட்டம் தொடர்பாக நாளது தேதி வரை அரசாணை ஏதும் பெறப்படவில்லை.ஸ

**6)தீவனப் பயிர் அபிவிருத்தித் திட்டம்: (2021-22)**

இத்திட்டம் தொடர்பாக நாளது தேதி வரை அரசாணை ஏதும் பெறப்படவில்லை.ஸ

**மாநில தீவன அபிவிருத்தி திட்டம் (SFDS - 2021-2022)**

(i) **இறவை சாகுபடி :** இத்திட்டம் தொடர்பாக நாளது தேதி வரை அரசாணை ஏதும் பெறப்படவில்லை.

(ii) **மானாவாரி சாகுபடி :** இத்திட்டம் தொடர்பாக நாளது தேதி வரை அரசாணை ஏதும் பெறப்படவில்லை.

## மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டம் பரப்பளவில் மட்டுமின்றி மிகப்பெரிய இயற்கையான உள்நாட்டு மீன்வளர்ப்பு வாய்ப்புகளை கொண்ட மாவட்டமாகும்.. தஞ்சாவூர் மாவட்டத்தில் பாயும் முக்கிய நதியான காவிரி மற்றும் துணை நதிகளான அக்னியாறு, வெண்ணாறு மற்றும் கல்லணை கால்வாய் ஆகிய நதிகளை கொண்டு விவசாயம் மட்டுமின்றி மீன் வளர்ப்பையும் பெருமளவு மேற்கொள்ள ஏதுவான மாவட்டமாகவும் விளங்குகிறது. அதேபோன்று மற்ற மாவட்டங்களை காட்டிலும் உள்நாட்டு இயற்கை நீர்நிலைகள் மற்றும் மீன்வளர்ப்பு குளங்கள் மூலம் ஆண்டொன்றுக்குசுமார் 43152 டன்கள் எடையுள்ள மீன்களை உற்பத்தி செய்து உள்நாட்டு மீன் உற்பத்தியிலும் சிறந்து விளங்குகின்றது.

**மீன்குஞ்சு உற்பத்தி**

தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு மூலம் ஒரு மீன்குஞ்சு உற்பத்தி நிலையமும், தனியார்கள் மூலம் 18 மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றது. இவற்றின் மூலம் ஆண்டொன்றுக்கு 7000 இலட்சம் முதல் 7500 இலட்சம் வரையிலான நுண்மீன்குஞ்சுகள் (Hatchlings) உற்பத்தி செய்யப்பட்டு தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களுக்கும் வினியோகம் செய்யப்படுகின்றது. அதுமட்டுமின்றி தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நான்கு அரசு மீன்குஞ்சுகள் வளர்த்தெடுப்பு நிலையங்கள் மற்றும் 61 தனியார் மீன்குஞ்சுகள் வளர்த்தெடுப்பு பண்ணைகள் மூலம் ஆண்டொன்றுக்கு 1300 முதல் 1500 இலட்சம்

மீன்விரலிகள் (Fingerlings) வளர்த்தெடுக்கப்பட்டு இம்மாவட்டத்தில் உள்ள மீன்வளர்ப்பு குளங்கள், ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்து வளர்க்கப்படுகிறது.

## கூட்டுறவுத்துறை

**2021–2022 ஆம் ஆண்டுக்கு தஞ்சாவூர் மண்டலத்துக்கு பயிர்கடன் இலக்காக 352.00 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 01.04.2020 முதல் 22.09.2021 வரை 82.55 கோடி வழங்கப்பட்டுள்ளது எனவும், தஞ்சாவூர் மண்டலத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் சாகுபடி பருவத்திற்கு 4038 டன் உரங்கள் தற்பொழுது இருப்பில் உள்ளது எனவும் தஞ்சாவூர் மண்டல இணைப்பதிவாளர் தெரிவித்துள்ளார்.**

### தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
### தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மேற்கொண்ட பணிகள் குறித்த அறிக்கை

- தற்சமயம் தஞ்சை காவிரி டெல்டா பகுதி விவசாயிகளின் சாகுபடிக்காக 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.
- பழுதான மின்மாற்றிகள் உடனுக்குடன் பழுது நீக்கம் செய்து சீரான மின்விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.
- நடப்பாண்டில் 498 புதிய மின்மாற்றிகள் புதிய மின் இணைப்பிற்கும் மற்றும் மேம்பாட்டு திட்டத்திற்கும் (01.04.2021 முதல் 15.09.2021 வரை) இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது.
- விரைவு தட்கல் திட்டத்தில் விவசாய மின் இணைப்பு (2020-21ஆம் ஆண்டு) 1571 விண்ணப்பதாரர்கள் பணம் செலுத்தியுள்ளார்கள். 1505 எண்ணிக்கை மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு விரைவில் மின்இணைப்பு வழங்கப்படும்.
- தமிழ்நாடு எரிசக்திதுறை மானியகோரிக்கை எண்.14-ன் படி நடப்பாண்டில் மாநிலம் முழுவதும் ஒரு லட்சம் மின்இணைப்புகள் வழங்கப்பட உள்ளன. இதில் தஞ்சை மாவட்டத்திற்கு கீழ்கண்ட புதிய மின்இணைப்புகள் வழங்கப்பட உள்ளன.

1. சாதாரண வரிசை திட்டத்தில் 31.03.2005 வரை பதிவு செய்த அனைத்து விவசாய விண்ணபதாரர்களுக்கும் 2067 மின்இணைப்பு வழங்கப்படும்.

2. சுயமுதலீட்டு (SFS) திட்டம் ரூ.25,000/-ல் 31.03.2011 வரை பதிவு செய்த அனைத்து விவசாய விண்ணப்பதாரர்களுக்கும் 925 மின்இணைப்புகள் வழங்கப்படும்.

3. சுயமுதலீட்டு (SFS) திட்டம் ரூ.50,000/-ல் 31.03.2011 வரை பதிவு செய்த அனைத்து விவசாய விண்ணப்பதாரர்களுக்கும் 588 மின்இணைப்புகள் வழங்கப்படும்.

தட்கல் (2021-22) திட்டத்தின் கீழ் தொகை செலுத்தி மின்இணைப்பு கோரும் அனைத்து விவசாய விண்ணப்பதாரர்களுக்கும் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**